

திருவாசகம் - 17

# அன்னைப்பத்து கதைவடிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

மாணிக்கவாசகர் தனது எண்ணங்களைப் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் மூலம் வெளிப்படுத்துவார். விளையாட்டு மனதிற்கு மகிழ்வைத்தரும். தேவையில்லாத சிந்தனைகளை அகற்றும். கூடிவாழச் செய்யும். புரிந்துணர்வை உண்டாக்கும். அதனால் மாணிக்கவாசக சுவாமிகள் விளையாட்டின் மூலம் சைவநெறியைக் கூறுகிறார். குறிப்பாகச் சிவனின் மகிமைகளையும், பெருமைகளையும் கூறுகிறார். பெண்களூடாகச் சொல்வது மற்றவர்களுக்குப் புரியும் என்று நினைக்கிறார். அருமையான தத்துவங்களை மிக மிக இலகுவாக்கிக் கூறுவதால் தான் திருவாசகத்தைத் தேன் என்றனரோ தெரியவில்லை. திருவாசகத்தை வாசிப்போரின் தொகை மிகமிக அதிகரித்துள்ளமை மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நன்றி.

அன்புடன்

கே.வி.குணசேகரன்

உ

சிவமயம்

# அன்னைப்பத்து

## ஆத்தும பூரணம்

## தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

**வேத மொழியர்வெள் ணீற்றர்செம் மேனியர்**

**நாதப் பறையினர் அன்னே என்னும்**

**நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்**

**நாதரிந் நாதனானா அன்னே என்னும் 01**

கதிரேசன் மாதுமையின் வீட்டுக்கு வந்தார். மாதுமை பெரும் சிவ பக்தை. ஆச்சிரமத்தில் சிவத்தொண்டுகள் பலவும் செய்பவள், வைத்தியர். அதனால் ஆச்சிரமத்திற்குவருவோரின் நோய்களைத் தீர்ப்பவள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை வேளை ஆச்சிரமத்திற்கு வரும் நோயாளர்களைச் சோதித்து மருந்து கொடுப்பவள். அன்று திங்கட்கிழமை. கவிதா திடீரென்று நோய்வாய்ப்பட்டமையால் கவிதாவை அழைத்துக்கொண்டு வந்திருந்தார்.

அப்போது மாதுமையின் மூன்று வயதுடைய மகனான அங்கயன் தனது தாயின் மடியில் இருந்து சொன்னான்; “அம்மா, சிவன் வேதத்தை ஓதுபவன். வெண்ணீறைப் பூசியவன். ஓசை வடிவினன் என்று கூறுகிறார்கள். வேதம் ஓதுவதென்றால் மந்திரம் ஓதுவது. வெண்ணீறு பூசியவன் என்றால் திருநீறு அணிந்தவன் என்று எனக்குத் தெரியும். ஓசை வடிவினன் என்றால் என்ன?” என்று கேட்டான்.

அப்போது உள்ளே வந்த கதிரேசன் சொன்னார்; “மகனை நல்லமுறையில் வளர்த்து வருகிறீர்கள். ஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயதில் தேவாரம் பாடியவர். உங்களது மகன் சிவனைப்பற்றி மூன்று வயதிலேயே தெரிந்து வைத்துள்ளான். தற்போது பெற்றோர் மூன்றுவயதுகூடப் பூர்த்தியாகாத பிள்ளைக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றனர். ஒரு மொழியைப் படிப்பது தவறல்ல. அது முன்னேற்றத்துக்கான வழி.

ஆனால் அதில் மோகங்கொண்டு தாய்மொழியை மறக்கலாகாது. சமயதத்துவங்களைப் புரிய வைத்தல் வேண்டும். சிறுவயதிலேயே கடவுளைப்பற்றி அவர்கள் தெரிந்து கொள்வதன் மூலம் பிள்ளைகளின் ஒழுக்கம் பேணப்படுகிறது, வளர்க்கப்படுகிறது. உனது சகோதரனான சிவகுமார் மூன்று வயதுகூட நிரம்பாத பிள்ளைக்கு அடித்தடித்து ஆங்கிலம் கற்பிப்பதாக தாய் குறை கூறுகிறாள். படித்தவர்கள் எப்போது திருந்தப் போகிறார்களோ தெரியவில்லை. கவிதாவுக்குத் திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டது. அவளது வரலாறு உனக்குத் தெரியும். தேவையான ஆலோசனைகளை வழங்கு" என்றார். கவிதாவை மாதுமை உள்ளே அழைத்துச் சென்றாள்.

கதிரேசன் அங்கயனைத் தூக்கி தனது மடியில் வைத்துக்கொண்டு சொன்னார்; "அங்கயா, நாதமென்பது இசை. எல்லாம் கடவுளிடம் இருந்து தோன்றியது போல இசையும் இறைவனிடமிருந்தே தோன்றியது. அதனால் சிவனை நாதவடிவினன் என்பர்." என்றார்.

அப்போது கவிதாவை அழைத்து வந்த மாதுமை சொன்னாள்; "பிரச்சினை எதுவும் இல்லை. இரவு நெய்யைக் கூடுதலாகச் சாப்பிட்டுவிட்டாள். இரவில் நெய்யை அதிகம் சாப்பிடக்கூடாது என்று சொன்னேன். அவள் சிவனைப்பற்றி நிறைய அறிந்து வைத்திருக்கிறாள்" என்றாள் மாதுமை.

**கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்**

**உள்நின் றுருக்குவர் அன்னே என்னும்**

**உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்**

**கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 02**

கவிதா நல்ல அறிவாளி. புத்திக் கூர்மையுள்ளவள். இப்போ நீங்கள் கூறியபடி சிவனைக் காலையிலும் மாலையிலும் வணங்கி வருகிறாள். கடந்த சில நாட்களாகத் தனது மனம் என்றுமில்லாதவாறு மகிழ்வடைகிறது. சிவன் எனது கண்களுக்குள் தோன்றுகிறார். இது பிரமையா? அல்லது உண்மையா என்று தெரியாமல் தடுமாறுகிறேன். எனது தாயாரும் தனக்குள்ச் சிவன் இருப்பதாகச் சொன்னால் ஊரவர் அவாவுக்குப் பைத்தியம் என்கின்றனர். அதை நினைக்கப் பயமாக இருக்கிறது என்கிறாள் என்றாள்" மாதுமை.

“கவிதா, சிவன் மீது பேரன்பு வைத்தால் அவன் வைப்பவரின் உள்ளத்தில் புகுந்து பேரானந்தத்தை உண்டாக்குவான். இது அவனது இயல்பு. மனம் அளவில்லாத மகிழ்ச்சியடைகின்ற தென்றால் அது சிவன் உன் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துகிறார் என்பதே அர்த்தம். அதை அறியாத மூடர் எதையெதையோ வெல்லாம் கூறுவர். நீ மிகுந்த துன்பத்தில் இருப்பதால் அதை நீக்கி மகிழ்வைச் சிவன் தந்துள்ளான். அந்த மகிழ்வின் மூலம் சிவன் உன் மீது அன்பு வைத்துவிட்டார் என்று நினைக்க வேண்டும். இனி உனக்கு எந்தத் துன்பமும் யாராலும் வராது. வரச் சிவன் விடமாட்டான் “ என்றார் கதிரேசன்.

“ஆச்சிரமத்தில் உள்ள பெண்களோடு சிவனின் பெருமையைப் போற்றி புகழ்ந்து முன்பு நானும் ஆடிப் பாடினேன். அதனால் தான் என்னால் வைத்தியராக முடிந்தது. இப்போது நீ ஆடிப் பாடினாய். அதனால் பொறியியல் கல்லூரிக்குத் தெரிவாகியுள்ளாய். அதனால் சிவனைப் போற்றிப் புகழ்ந்து ஆடிப்பாடி விளையாடு” என்றாள்” மாதுமை.

**நித்த மணாளர் நிரம்ப அழகியர்**
**சித்தத் திருப்பரால் அன்னே என்னும்**
**சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை**
**அந்தர்ஆ னந்தரால் அன்னே என்னும் 03**

கதிரேசனும் மாதுமையும் கவிதாவும் கதைத்துக் கொண்டிருக்கும் போது மாதுமையின் தாயின் தாயார், “கதிரேசு, கன நாளாகக் காணவில்லை. அடிக்கடி வந்தால் என்ன?” என்று கேட்டாள் வள்ளியம்மை.

“எங்கை அக்கா நேரமிருக்கு. கோவில் வேலை, ஆச்சிரம வேலை இப்படியே பொழுது போகிறது” என்றார் கதிரேசன்.

வள்ளியம்மை உள்ளே சென்று ஒரு தட்டில் எள்ளுப்பாகும், மறுதட்டில் மோரும் கொண்டு வந்தாள். கதிரேசன் எள்ளுப்பாகை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு “நல்லாய் இருக்கு. யார் செய்தது” என்று கேட்டார்.

“ஏன் எனக்குச் செய்யத் தெரியாது என்று நினைக்கிறியே. நான் தான் உரலில் எள்ளையும் பனங்கட்டியையும் கலந்து இடித்து பாகாக்கினேன். எனக்கு என்ன வயது போட்டுதே. வாற மாதம் ஐந்தாம் திகதி வந்தால் தொண்ணூறு வயது முடிந்து தொண்ணூற்றொன்று தொடங்குகிறது. இங்கு வேலை செய்ய வாற துரைசிங்கத்துக்கு நாற்பது வயது. வேலை செய்தால் இளைக்கிறான். களைக்குது என்கிறான். அத்துடன், “அம்மா நீங்கள் எப்படி தொண்ணூறு வயதில் உரலில் எள்ளு இடிக்கிறீர்கள்” என்று கேட்கிறார். இது வைரம் பாய்ந்த உடம்பு. சிவபூசையைக் காலையும் மாலையும் செய்கிறேன். மூச்சுப்பயிற்சி செய்கிறேன். எவ்வேளையிலும் சிவ நினைவாக இருக்கிறேன். அதனால் மனதில் உறுதி பெருகுகிறது. மனம் உறுதியாக இருந்தால் உடல் உறுதியாக இருக்கும். உனக்கும் என்னிற் பார்க்க இரண்டொரு வயது குறைவாக இருக்கும். நீயும் இப்போதைய இளைஞர்களை விட தைரியமாகத்தானே இருக்கிறாய்” என்றாள் வள்ளியம்மை.

“உண்மைதான் அக்கா. சிவனிருக்கும் உள்ளத்தில் தீய எண்ணங்கள் இராது. தீய எண்ணங்களான பொறாமை, கோபம், எரிச்சல், சுயநலம் என்பவை தான் உடலைப் பலவீனப்படுத்துவன. அவை இல்லாத மனம் எப்போதும் சுத்தமாக இருக்கும். சுத்தமான மனதில் சிவன் மகிழ்வோடு இருப்பார். அதனால் உடலுக்கு பாதுகாப்பு உண்டாகும். சிவனது பாதுகாப்புத்தானே பலம்” என்றார் கதிரேசன்.

“ கவிதா கதிரேசுத் தாத்தா கூறுவதைக் கேட்டாய் தானே. அதனால் நீயும் சிவனை மனதில் இருத்தி அதைச் சுத்தமாக வைத்திரு. அதனால் அறிவு பெருகும்” என்றாள்” மாதுமை.

**ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்**

**வேடம் இருந்தவா றன்னே என்னும்**

**வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்**

**வாடும் இதுவென்ன அன்னே என்னும் 04**

மாதுமையின் வீட்டுக்குள் இருந்து பயந்து அலறியபடி ஓடி வந்தாள் கவிதா. அவளின் பின்னால் சிரித்துக் கொண்டு ஓடி வந்தான் அங்கயன். மாதுமை என்னவோ ஏதோ எனப் பயந்து உள்ளே சென்றாள். பின்னால் கதிரேசன் சென்றார்.

“அம்மா பூசையறையில் இருந்த சிவனின் பெரிய படத்தைப் பார்த்து விட்டுப் பயந்து விட்டாள் கவிதா அக்கா” என்றான் அங்கயன்.

“சிவபெருமானைக் கண்டு பயப்படுகிறாயா…? என்று கேட்டாள் மாதுமை.

“நான் இதுவரை இப்படியான படத்தைப் பார்க்கவில்லை. பெரிய பாம்பு, புலித்தோலைப் போர்த்திய உடல், நீறுப்பூச்சு, ஆண்டிக்கோலம் பயமுறுத்துகிறது. அங்கயன் சொன்ன பின்பு பார்த்தேன். எனினும் பயமாக இருக்கிறது”.

“எனக்குப் பயமில்லை. பயம் வந்தால் சிவபெருமானை நினைத்தால் பயம் போய்விடும் என்று அம்மா சொன்னவா. அதனால் நான் எதற்கும் பயப்படமாட்டேன். அத்துடன் சிவனைப்போல உடையும் அணிந்து பார்ப்பேன். புலித்தோல் போலச் சேலையுள்ளது. கடதாசியால் செய்யப்பட்ட பாம்பும் என்னிடமுண்டு” என்றான் அங்கயன்.

மாதுமை கவிதாவை அழைத்துச் சென்று சிவபெருமானின் அந்தப் பெரிய படத்தைக் காட்டினாள். ஆறடி உயரமான சுவரில் அது மிகவும் அழகாக வரையப்பட்டிருந்தது. கவிதாவின் மனம் இன்னும் சமநிலை அடையவில்லை.

“பாம்பையும் புலித்தோலையும் நான் கண்டுள்ளேன். ஆனால் இக் கோலத்தைக் காணவில்லை. இது என்ன கோலம்”? என்று கேட்டாள். கவிதா.

“இது சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல் கோலங்களில் ஒன்று. இக்கோலத்தை ஆண்டிக்கோலம் என்பர். உலகையும், உலகில் உள்ள எல்லாப் பொருட்களையும் படைத்த சிவன், தான் எதுவும் இல்லாததுபோல ஆண்டிக்கோலம் கொண்டது என்னை மிகமிகக் கவர்ந்தது. உலகில் உள்ளோர் சிறிதளவு பொருட்களை வைத்துக்கொண்டு எல்லாப் பொருட்களும் தம்மிடம் உள்ளதென்று மார்பு தட்டுகிறார்கள். ஓர் அணுவளவு கூடப் படிக்காதவர்கள் அறிவு முழுமையாக உள்ளவர்போலத் தம்பட்டமடிக்கின்றனர். பொருளுள்ளவனும், அருளுள்ளவனும், அறிவுள்ளவனும் ஆண்டியாக இருத்தல் வேண்டும் என்பதை இவ்வுருக் குறிக்கிறது. சிவபக்தியுள்ளவர்கள் சிவனின் எக்கோலத்தைக் கண்டாலும் மிக்க மகிழ்வுடன் கைகூப்புவர். சிவபக்தி இல்லாதவர்கள் தான் அச்சப்படுவர். அதனால் சிவபக்தியை வளர்த்துக்கொள். அது எல்லாப் பயத்தையும், பாசத்தையும் நீக்கும்” என்றாள் மாதுமை. கவிதா அச்சம் தெளிந்து அங்கயனுடன் அச்சித்திரத்திற்கு அருகில் சென்று நின்றாள்.

**நீண்ட கர்த்தர் நெறிதரு குஞ்சியர்**

**பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்**

**பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை**

**ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும் 05**

அப்போது மாதுமையிடம் மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் இளைஞன் ஒருவனை அவனது தந்தை அழைத்து வந்தார். அவர்கள் இருவரும் வெளியூரவர்கள். அதனால் அவர்களைக் கதிரேசனுக்குத் தெரியவில்லை. இருபது வயது மதிக்கத்தக்க அவன் மெலிந்து கறுத்திருந்தான். அவனது தந்தையின் முகத்தில் பெருங்கவலை தென்பட்டது.

“இப்போ எப்படி?” என்று கேட்டாள் மாதுமை.

“பரவாயில்லை அம்மா. என்றாலும் முற்றாகக் குணப்படவில்லை” என்றார் அவனது தந்தை.

“படிப்பதற்கென்று பட்டணத்திலுள்ள பிரபல கல்லூரியில் சேர்ந்த இவன் பாடம் படியாது கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டான். நான் வேலை செய்யும் ஊரவர்கள். அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவன். தகப்பன் நல்லதொரு ஆசிரியர், சிவபக்தர், ஊரில் மதிப்புள்ளவர். முன்பே தெரிந்தவர். அதனால் வீட்டுக்கு அடிக்கடி வருவார்” என்றாள் மாதுமை.

“ஐயா, தவறு முழுவதும் என்னில் தான் உள்ளது. ஊர்ப்பாடசாலையில் அதிபராக இருக்கும் நான் ஊர்ப்பாடசாலையை மேம்படுத்தாது பட்டணத்தில் உள்ள பாடசாலையில் இவனைச் சேர்த்தேன். பட்டணத்து ஆசிரியர்கள் வகுப்பில் கற்பிப்பார்களே தவிர அவர்கள் மாணவர்களின் நடத்தையைக் கவனிப்பதில்லை. இவனும் எட்டு மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லாது கண்டபடி ஊர்சுற்றிப் போதைப்பழக்கத்திற்கு உள்ளாகிவிட்டனர். உயர்வகுப்பு மாணவர்கள் மேலதிகப் படிப்பென்று கூறி தனியாரிடம் கல்வி கற்கிறார்கள் என்று பாடசாலை நிர்வாகம் கருதுகிறது. ஆனால் இவர்கள் தனியாரிடமும் கற்கச் செல்லாமல், ஊர் சுத்துகின்றனர். முன்பு பட்டணப் பாடசாலைகளைவிடக் கிராமப் பாடசாலைகள் நன்றாக இயங்கின.

இப்போ எல்லாரும் ஊர்ப்பாடசாலைகளைவிட்டு வெளியேறுவதால் இந்நிலை உண்டாகியுள்ளது. அது ஊரவரினதும், ஊர்ப்பாடசாலை ஆசிரியர்களினதும், நிர்வாகத்தினரினதும் பிழை” என்றார் வந்தவனின் தந்தை.

“மருந்தோடு உங்கள் மகனும், நீங்களும் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். நீண்ட கைகளையுடையவரும், நெருக்கமான தலைமயிரை உடையவரும், தென்பாண்டி நாட்டவருமான சிவனை நாள்தோறும் வணங்கிச் சிவபூசை செய்யும்படி கூறியுள்ளேன். பல்வேறு விசயங்களில் அலைந்து திரியும் மனது சிவனைத் தியானிப்பதன்மூலம் ஒருமுகப்படுத்தப்படும் என்று சொல்லியுள்ளேன்” என்றாள் மாதுமை.

கதிரேசன் நிமிர்ந்து, அவனது முகத்தைப் பார்த்தார். நீறணிந்திருந்தான். அவனது முகம் பொலிவில்லாது இருந்தது. “ஆச்சிரமத்திற்கு வரச் சொல்லம்மா” என்றார் கதிரேசன்.

“அதற்காகத்தான் இன்று வரச் சொன்னேன்” என்றாள் மாதுமை.

**உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்**

**மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்**

**மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காணிகலார்**

**என்ன அதிசயம் அன்னே என்னும் 06**

“மாணவனது பெயர் செந்தில். தந்தையின் பெயர் ஆசீர்வாதம். மாதுமை சொன்னாள்; “செந்தில், மனதில் உள்ள தீய எண்ணங்களை நீக்குவது சிவனது நாமம். சிவனது நாமம் ‘நமசிவய’ என்ற ஐந்தெழுத்து என்பது உனக்குத் தெரியும். காலையும் மாலையும் சிவபூசை செய்வது பற்றி உனக்கு நான் சொல்லித் தந்துள்ளேன். சிவன் எல்லோரினது உள்ளத்திலும் வீற்றிருக்கிறார். அதனால் அவரைப் புறத்தே தேடத் தேவையில்லை. உனது வீட்டில் சிவலிங்கம் உள்ளது. காலையில் உடலைத் தூய்மைசெய்துவிட்டு ஒரு பூவைச் சிவலிங்கத்திற்கு வைத்து எனது தீய எண்ணங்களை விலக்கிவிடு என்று வணங்கச் சொன்னேன். அவ்வாறு செய்கிறாயா?” என்று கேட்டாள் மாதுமை. “தினமும் காலையும் மாலையும் இவ்வாறு செய்து வருகிறேன். இப்போ எனக்கு அத் தீய எண்ணங்கள் மனதில் உண்டாவதில்லை. தீய செயல்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் உண்டாவதில்லை. மகிழ்வோடு படிக்கிறேன். இப்போ

பட்டணப் பாடசாலையை விட்டு விட்டு ஊர்ப் பாடசாலையில் எனது இனத்தவர்களின் பிள்ளைகளையும் எனது பெற்றோரின் நண்பர்களினது பிள்ளைகளும் கற்கிறார்கள். அப்பா மேலதிகமாக ஒவ்வொரு பாடத்திற்கும் பிரத்தியேக ஆசிரியர்களை ஒழுங்கு செய்துள்ளார். அதனால் மகிழ்வுடன் படிக்கிறேன். முன்பு ஊர்ப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் மேலதிக வகுப்புக்களுக்குச் செல்லாமையால் பெறுபேறு மிகக் குறைவாக இருந்தது. அப்பா தனது நலனுக்காகப் பல விடயங்களைச் செய்தார். அது ஊரவர்களுக்குப் பெரும் உதவியாக அமைந்துள்ளது. அதை ஊரவர்கள் பாராட்டுகின்றனர்." என்றான் செந்தில்.

"பிழை யாவும் அதிபர் ஆசிரியர்களில் தான் தங்கியுள்ளது. ஊர்ப் பாடசாலையை முன்னேற்றாது முன்னேறிய பாடசாலைகளை நோக்கிச் சென்றால் பல தீமைகள் உண்டாவதைத் தவிர்க்க முடியாது" என்றார் ஆசீர்வாதம்.

**வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்**

**பள்ளிக்குப் பாய்ந்தர் அன்னே என்னும்**

**பள்ளிக்குப் பாய்த்தர் பாய்பரி மேற்கொண்டான்**

**உள்ளங் கவர்வரால் அன்னே என்னும் 07**

"செந்தில் சிவன் வெள்ளை ஆடையை அணிந்தவர். நீற்றை மூன்று வரியாக அணிந்தவர். துறவிகளைப் போல நீண்ட சட்டை அணிந்தவர். அரசர் குதிரை சவாரி செய்யும்போது அணியும் சட்டையை அணிந்தவர். இவ்வாறு எந்த உருவில் சிவன் காட்சி தந்தாலும் அவர் மக்களின் உள்ளத்திலேயே வாழ்பவர். பாடசாலையில் விநோத உடைப்போட்டி நடைபெறும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேடம் போடுவது போலச் சிவன் தேவைக்கேற்றபடி வேடம் போடுவார். அதைப் பற்றியெல்லாம் நீ யோசிக்கக்கூடாது. நேற்று ஆச்சிரமத்தில் ஒரு மாணவன். சிவனின் உண்மையான தோற்றம் எது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக கூறுகிறார்கள். இது எனக்கு மயக்கத்தைத் தருகிறது" என்று சொன்னவன். நாம் உடையணிந்து பல்வேறு இடங்களுக்குச் செல்கிறோம். திருமணம் போன்ற சுபநிகழ்வுகளுக்கு விலையுயர்ந்த உடைகளை அணிகிறோம். வீட்டில் சாதாரண உடைகளும் வயலுக்குச் செல்லும்போது அதற்கேற்ற உடையும், பாடசாலைக்குச் செல்லும் போது சீருடையும் அணிகிறோம். இடத்திற்குத் தக்கவாறு உடையணிதல் எமது மரபு. அதேபோலத் தேவையான இடத்துக்குத் தேவையான உடையைச் சிவனும் அணிவார். உடையில் மாற்றம்

இருந்தாலும் குணத்தில் மாற்றம் இராது. அதனால் எந்தவிதமான வேறுபாடுகளையும் நினையாது சிவனின் உருவத்தை மனதில் நிலைநிறுத்து. அது உனது தீய எண்ணங்களை அகற்றும். இவர் கதிரேசன் என்பவர் எனது குரு. இந்த ஊரின் தலைவன். ஆச்சிரமத்தை நிர்வகிக்கிறார். இன்று நாம் அங்கு செல்வோம். அங்கு பல ஊர்களைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளனர்" என்றாள் மாதுமை.

**தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்**

**ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்**

**ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்**

**தான மிருந்தவா றன்னே என்னும் 08**

ஆச்சிரமத்திற்கு வந்த ஆசீர்வாதத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னர்; "மகனே நீ அதிபர். எதையும் நான் சொல்லத் தேவையில்லை. கற்றவர்களுக்குச் சிவனைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை என்று முன்பு நான் நினைத்திருந்தேன். ஆனால் அவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்று பின்பு தான் உணர்ந்தேன். பிள்ளையைப் பெறுவது முக்கியமானதல்ல. அதை உரிய முறையில் வளர்த்தெடுப்பதுதான் புத்திசாலித்தனமானது. தற்போதைய பிள்ளைகளைப் பற்றி மூத்தவர்கள் பெற்றோருக்குச் சொல்வது பிடிக்காது. தமது பிள்ளைகள் உத்தம புத்திரர்கள் என்று படித்த பெற்றோரும் உணர்கின்றனர். அதனால் அவர்கள் பிள்ளைகளை அளவுக்கதிகமாக நம்புகின்றனர். அண்மையில் ஓர் அதிபரின் மகன் ஒரு கன்னிப்பெண்ணுடன் தவறான முறையில் நடப்பதைக் கண்ட ஒரு தொழிலாளி அதிபருக்கு அதைச் சொல்ல அதிபர் அவனைக் கண்டபடி ஏசித் துரத்தி விட்டார். அதே தொழிலாளி அந்த விவசாயிடம் சென்று, " உனது மகன் அதிபரின் மகனோடு சேர்ந்து ஒரு கன்னிப் பெண்ணோடு தகாத முறையில் நடந்துள்ளான்" என்றதும் அவ் விவசாயி தனது மகளை அழைத்துக் கடுமையாக விசாரிக்க அவரது மகன் ஒப்புக்கொண்டான். அதனால் அவ்விவசாயி தனது மகனை அதிபரின் மகனோடு சேரவிடாது தடுத்து விட்டான். ஒரு மாத காலத்துள் பல முறை அதிபரின் மகன் அப்பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முற்பட அப்பெண்ணின் தந்தை காவல்துறையில் முறையிட்டார். காவல்துறையினர் அதிபரின் மகனை கைது செய்தனர். நீரும் அவ்வாறு தான் நடந்துள்ளீர். பலர் பல முறை உமக்கு உமது மகன் போதைப்பொருள் பாவிக்கிறான் என்று சொல்லியும் நீர் நம்பவில்லை. இது எனக்கு எப்படி தெரியும் என்று நினைக்கிறீரா…? ஒருவர் ஆச்சிரமத்திற்கு வருமுன் அவர் எப்படி வாழ்கிறார் என்பதை

நான் அறிந்து கொள்வேன். தாளிக் கொடியையும் அறுகம்புல்லையும் மாலையாக அணிந்த சிவன் கால தத்துவம். காலத்திற்கும் அப்பாலுள்ளவை சிவனின் கையில் அடங்கியுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளாவிட்டால் அழிவு தான் உண்டாகும். அதை மற்றவர்கள் புரிய வைப்பர். அதிபரின் மகனின் செயலை ஒருவர் சிவனின் அருளால் புரிய வைக்கும் போது அதைச் சிவனருளால் புரிய வைக்கும்போது அதைச் சிவனருளால் புரிந்து கொள்ள முடியாமைக்குக் காரணம் காலத்துவத்திற்கு அப்பாற்பட்டவன் தான் என்று அதிபர் உணர்ந்தமையேயாகும். இது சாதாரணமாகப் படித்தவர்கள் பலரிடம் உண்டு. தனக்குத் தெரியாது எதுவும் நடைபெறாது என்று நினைத்ததால் வந்த வினை இது" என்றார் சவாமிகள்.

**தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்**

**ஐயம் புகுவரால் அன்னே என்னும்**

**ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்**

**நையமிது வென்னே அன்னே என்னும்** 09

"ஆசீர்வாதம் இங்கு வந்தால் உண்மையைச் சொல்ல வேண்டும். உண்மையாக நடக்க வேண்டும். உம்மைப் பற்றியும் உமது மகனைப் பற்றியும் சரியாக அறியாது நாம் எதுவும் செய்ய முடியாது. உண்மை தெரியாது உபதேசம் செய்வது காலில் உண்டான காயத்திற்குத் தலையில் மருந்து கட்டுவதைப் போன்றது. மாதொருபாகனான சிவன் தனது திருவிளையாடல்களின்போது ஒவ்வொரு வடிவத்தை எடுப்பது உயிர்களுக்கு நன்மை செய்வதற்காகவே. அவர் எடுக்காத வேடமில்லை. எவரும் எடுக்க விரும்பாத வேடம் பிச்சாடனர் வேடம். சிவன் வீட்டுக்கு வீடு பிச்சை எடுத்துண்பதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவ்வேடம் உலக வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தவேயாகும். ஒரு காலத்தில் பணக்காரனாக இருந்தவன் பின் பிச்சைக்காரனாகலாம். இளமையில் இறக்கலாம். முதியவரான போது கவனிப்பாரின்றித் துன்பப்படலாம். எதையும் நாம் கணிக்கமுடியாது. காலத்திற்குக் காலனாக இருப்பவன் சிவன். அவனால் தான் எதையும் தீர்மானிக்க முடியும். இவற்றை உணரச் சிவனின் அருள்தேவை. சிவனருளுள்ளோர் எதையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வர். முதலில் நீங்கள் தான் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்பு தான் உங்களது மகனுக்குப் புரிய வைக்க முடியும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**கொன்றை மதியமும் கூவின மத்தமும்**

**துன்றிய சென்னியர் அன்னே என்னும்**

**துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே**

**இன்றெனக் கானவா றன்னே என்னும்** **10**

"ஆசீர்வாதம், சிவன் முடியில் கொன்றைப்பூவும், பிறைச்சந்திரனும், வில்வமும், ஊமத்தம்பூவையும் அணிந்திருக்கிறான். அக்கோலத்தைப் பார்க்கும் பக்தர்களுக்குப் பக்தி என்னும் பித்தம் தலைக்கேற வேண்டும். உண்மையான சிவபக்தன் சிவசின்னங்களில் ஒன்றைக் கண்டாலே சிவ நினைவாகிவிடுவான். உங்களுக்குச் சிவ நினைவு இல்லை. வீட்டுக்கும் சமூகத்திற்கும் முன்மாதிரியாக வாழவேண்டிய நீங்கள் வேலை நேரத்திலும் குடிப்பீர்கள். அதைப் பார்க்கும் பிள்ளை வழி தவறுவது இயல்பு தானே. பிழையை உங்களில் வைத்துக் கொண்டு பாடசாலையையும், நிர்வாகத்தையும், ஏனைய மாணவர்களையும் குறை கூறுவதில் அர்த்தமில்லை. நீங்கள் தான் திருந்த வேண்டியவர். அதனால் நீங்கள் ஆச்சிரமத்திற்கு வருவதாக இருந்தால் குடிக்கக்கூடாது. முழுமையான சிவபக்தனாக வருகை தரல் வேண்டும். இது முடியாவிட்டால் சென்று விடுங்கள். நீங்கள் மாணவராக இருந்தால் உபதேசிக்கலாம். தண்டனையும் தரலாம். உபதேசிக்கவும் தண்டனை கொடுக்கவும் உரிமை உள்ள உங்களுக்கு எதைச் சொல்வது. இவற்றை உணர்ந்து கொள்ளுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஆசீர்வாதம் எதுவும் பேசாது சில கணங்கள் நின்றார். பின்பு 'என்னில் தான் தவறுள்ளது" என்றார்

திருச்சிற்றம்பலம்